**செய்தி வெளியீடு எண் : 1533** **நாள் : 01.08.2023**

**<u>செய்தி வெளியீடு</u>**

**மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், பாரா பேட்மிண்டன் விளையாட்டு வீரர் திரு. எம்.எஸ்.சுதர்சன் அவர்களுக்கு, மேற்கு ஆஸ்திரேலியா பாரா பேட்மிண்டன் போட்டியில் கலந்து கொள்வதற்காக ரூபாய் 3.20 லட்சம் நிதியுதவியினை வழங்கினார்.**

நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்த பாரா பேட்மிண்டன் விளையாட்டு வீரர் திரு. எம்.எஸ்.சுதர்சன் அவர்கள், அக்டோபர் மாதம் மேற்கு ஆஸ்திரேலியாவில் நடைபெற உள்ள பாரா பேட்மிண்டன் போட்டியில் கலந்து கொள்ள உள்ளார். பாரா பேட்மிண்டன் விளையாட்டு வீரருக்கு, போட்டியில் கலந்து கொள்வதற்காக நுழைவு கட்டணம், விமான கட்டணம், பயிற்சி, உணவு மற்றும் தங்கும் கட்டணமாக தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து ரூபாய் 3.20 லட்சத்திற்கான காசோலையினை சென்னை முகாம் அலுவலகத்தில் இன்று (01.08.2023) நடைபெற்ற நிகழ்வில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

மேலும், புது தில்லியில் 2023 ஜூலை 22 முதல் ஜூலை 24 வரை நடைபெற்ற தேசிய செரிபிரல் பால்சி (Cerebral palsy) நீச்சல் சாம்பியன்ஷிப் போட்டியில் பதக்கங்கள் வென்ற பெருமூளை வாதத்தினால் பாதிக்கப்பட்ட 5 நீச்சல் வீரர்கள், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர். இவர்களுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசு வழங்கி சிறப்பித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் திரு. ஜெ.மேகநாத ரெட்டி, இ.ஆப., சங்க நிர்வாகிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in